மாணவர் பேரவை அமைக்க அனுமதி தந்திருக்கும்போது, செயின்ட் சேவியர் கல்லூரியில் அதற்கு அனுமதி தர மறுக்கக்கூடாது. நேரடித் தேர்தல் வைத்தால் மாணவர்களுக்கிடையே கலகம் வரும் என்ற நிலை இருந்தால் இண்டைரக்ட் எலக்ஷன் வைத்துக் கொள்ளுவதற்குக்கூட மாணவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பில் இருக்கும் பிரதிநிதிகள் எல்லோரும் சேர்ந்து பேரவையை அமைத்துக் கொள்ள மாணவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து. இதை எல்லாக் கல்லூரிகளிலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மாணவர்களுக்கு உரிமை கொடுத்து நல்ல முறையில் தீர்வு காண வேண்டுமென்ற நோக்கத்துடன் கல்லூரிக் கல்வி இயக்குநர் இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தி வருகிறார். அந்த முதல்வர் இரண்டு நாட்கள் அவகாசம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இதிலே முதல்வர் அவர்களுடைய பதில் இரண்டு நாட்களில் தெரிந்தவுடன் அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து இதிலே சுமுகமான முடிவு ஏற்பட வழி செய்யும். இப்போது அங்கே அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது. ஆகவே, இப்போது அதைப்பற்றி இந்த அவையிலே விவாதிப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலே வழி ஏற்பட்டுவிடாது. அரசு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட தக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதால், இதிலே ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு இடம் இல்லை என்று கூறி அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அவசியமில்லை என்ற காரணத்தால் இந்தத் தீர்மானங்களுக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த கவன ஈர்ப்பு தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Before the Hon. Speaker goes to the next item of business in the agenda, I would like to draw the attention of the House, with the permission of the Hon. Speaker to the following very important matter.

I gave notice under Rule 41........

MR. SPEAKER: The hon. Member will have to give notice for raising this matter......

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்ப நாட்கள் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். திடீரென்று 41-வது விதியின்படி அவர்கள் பிரச்சினையை எழுப்ப முடியாது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Please hear me, then you can know what I am going to say and then you can give me a reply.

MR. SPEAKER: The hon. Member must get the consent of the Speaker before raising the matter.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : That is what I am bringing forth now. With regard to the notices under Rule 41, I gave notices under Rule 41 and all have been rejected on the ground that they are not of public importance. That takes away the privilege of the members here......

MR. SPEAKER : The hon. Member will please resume her seat.

கவன ஈர்ப்புப் பிரச்சினைகள் உங்களுக்கு மட்டும் பிரத்தியேகமானவை அல்ல. சட்டப் பேரவைத் தலைவர் உரிய காரணங்களை ஆராய்ந்து அதன் பிறகு முடிவு எடுக்கப்படுகிறது. ஆகவே, பேரவையில் இந்த மாதிரி திடீரென்று பிரச்சினைகளை எழுப்புவது விதிமுறைகளுக்கு உட்பட்டது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : May I make one statement with the permission of the Hon. Speaker ? When notices of motions are given and when they are rejected by the Hon. Speaker the discretion is perfectly with the Hon. Speaker, but he can call the hon. Member concerned and explain to him why it has not been taken up. That procedure may please be adopted, so that there may not be any discrimination, if I may use that expression, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது இதுதான். ஒவ்வொன்றுக்கும் விதிமுறைகள் இருக்கின்றன. கவன ஈர்ப்பு பிரச்சினைகளுக்கு அனுமதி மறுக்கப்படும்போது அதற்கான காரணங்கள், விளக்கங்கள் எல்லாம் வெளிப்படையாக இருக்கும்போதுதான் மறுக்கப்படுகிறது. அதை எந்த ரூபத்திலாவது கொண்டுவர வேண்டுமென்பதற்காக அனுபவம் வாய்ந்தவர்கள், ரொம்ப நாட்களாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் சட்டமன்ற நிகழ்ச்சிக்கு நடுவிலே நுழைவார்களானால் சட்டமன்றத்தின் உரிமையை, நியாயமான புனிதத் தன்மையைக் குறைக்கிறோம் என்றுதான் பொருள். இந்தக் காரியங்களில் எல்லாம் முடிவு எடுக்கும்போது மிகுந்த அக்கறையுடன் காரியம் நடைபெறுகிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள். . . ..

THIRU R. PONNAPPA NADAR : We are not treated with the respect which we deserve and we do not want to participate in the further proceedings of this House because several motions have been given notice of by our members and they have been rejected at the Chamber. So, we are going out of the House. We are staging a walk out.

(Then Thiru R. Ponnappa Nadar and his party members staged a walk out).